DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சண்முகவேல் | Father/Husband Name : சுப்பையா |
| Age : 61 | Village : மம்சாபுரம் |
| Taluk : | Calling : மின்சாரவாரியம் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Sep 29, 2025 4:45 PM

(Accused Present)

**முதல் விசாரணை :–**

1. நான் மம்சாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். மின்சாரவாரியத்தில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 04.01.2020ம் தேதி வெம்பக்கோட்டை மின்வாரியத்தில் மின்பாதை ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது, காலை 09.00 மணிக்கு எனது மேல் அதிகாரி உதவி பொறியாளர் உத்தரவு படி மடத்துப்பட்டி – தாயில்பட்டி ரோட்டில் மின்கம்பங்களை நடும் பணியில் இருந்தோம். என்னுடன் மேற்படி பணியின்போது தற்காலிக பணியலிருந்த கருப்பசாமி உடையார், காளிராஜ், மணி, முருகன் மற்றும் இவ்வழக்கில் விபத்தில் இறந்துபோன நபர் (தற்போது அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை) ஆகியோர் இருந்தனர்.

3. நாங்கள் ஒவ்வொரு மின்கம்பங்களாக நட்டு வந்துகொண்டிருந்தோம் அப்போது நேரம் சுமார் 03.00 மணிக்கு மடத்துப்பட்டி – தாயில்பட்டி ரோட்டில் தேவாலயத்திற்கு அருகில் டக்கரை ரோட்டின் குறுக்கே நிறுத்தி ரோட்டின் கிழக்கு பக்கத்தில் வாகனங்களை தடுத்த நிறுத்தும் பணிக்காக உடையார் மற்றும் சுப்பயைா ஆகியோர்களையும் மேற்கு பகுதியில் கருப்பசாமி மற்றும் முருகன் ஆகியோர்களை நிறுத்தியிருந்தோம். அவர்கள் நான்குபேரும் சாலையில் வரும் வாகனங்களை ஒரு திசையில் வரும் வாகனங்களை ஒருபுறமாகவும் மறுபுறம் வரும் வாகனங்களை மறுபுறமாகவும் நிறுத்தி வைத்திருந்தார்கள்.

4. பின்னர் டக்கரிலிருந்த மின்கம்பங்களை இறக்குவதற்காக ஆட்களை தயார் செய்து 2 நபர்கள் டக்கரின் உள்ளேயும், 4 நபர்கள் டக்கரின் வெளியேயும் நின்று மின்கம்பங்களை இறக்கிக்கொண்டிருந்தார்கள். மேற்கிலிருந்து 5446 என்ற பதிவெண் கொண்ட வேன் மடத்துப்பட்டியிலிருந்து தாயில்பட்டி நோக்கி மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசை நோக்கி வேகமாக வந்தது. அப்பொழுது நாங்கள் அந்த சாலையில் வாகனத்தை நிறுத்துவதற்காக நின்றுகொண்டிருந்தவர்கள் சத்தம்போட்டார்கள். வாகனத்தை ஓட்டிய நபர் ஒரே பக்கமாக நின்ற வாகனங்களை முந்திசென்று ஓட்டி வந்தார். (வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி என்று சாட்சி அடையாளம் காட்டினார்.)

5. அந்த வேன் வேகமாக வந்து எங்களுடன் வேலை செய்துகொண்டிருந்த சந்துரு என்பவர் மீது மோதியதில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு மூக்கிலும், காதிலும் இரத்தம் வந்தது. சந்துரு குனிய முயற்சி செய்தபோது வாகனம் அதற்குள் அவர் மீது மோதி விட்டது. அவருடன் நின்று கொண்டிருந்த மற்றொரு நபர் தப்பித்துக் கொண்டார். ஆஜர் எதிரி ஓட்டி வந்த வாகனம் பக்கத்திலிருந்த ஓடையில் கவிழ்ந்துவிட்டது. காயம்பட்ட சந்துருவை தாயில்பட்டி அரசு மருத்துவமனைக்கு இருசக்கரவாகனத்தில் சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து

மேல்சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு சந்துரு இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் இறந்துபோன சந்துருவின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துவிட்டு , நடந்த சம்பவத்திற்கு நான் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் போலீசாரிடம் அளித்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

6. புதிதாக ஒரு மின் கம்பத்தை நிறுவும்போது அந்த இடத்தில் லயன் இன்ஸ்பெக்டர், சூப்பரவைசர், போர் மேன் இருக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வேலை செய்து கொண்டிருந்ததாக கூறும் நபர்கள் ஒப்பந்த பணியாளர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சூப்பர்வைசர் மற்றும் போர் மேன் இல்லை என்றால் சரிதான், நான் லைன் இன்ஸ்பெக்டர் ஆவேன். வழக்கு சம்பவத்தின் போது நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால் நாங்கள் மின் கம்பம் கொண்டு சென்ற வாகனத்தை நிறுத்தி பாதுகாப்பாக மின்கம்பத்தை இறக்குவதற்காக மேற்பார்வை செய்து கொண்டிருந்தேன்.

7. டிராக்டருக்கு மேற்கு பக்கம் யாரெல்லாம் இருந்தோம் என்றால் நான், மணி மற்றும் சந்துரு ஆகிய மூன்று பேரும் இருந்தோம். நானும் மணியும் டிராக்டருக்கு மேற்கு பக்கம் இருந்தோம் என்ற விபரத்தை போலீசார் எங்களை விசாரித்த போதும், என்னுடைய புகார் மனுவிலும் கூறவில்லை என்றால் நான் கூறினேன், போலீசார் எழுதினார்களா என்று எனக்கு தெரியவில்லை. மின் கம்பம் இறக்கும் பணியை ஒருவர் ஒப்பந்தம் எடுத்து தான் செய்தார் என்றால் சரிதான்.அந்த ஒப்பந்தத்தை எடுத்த நபரின் பெயர் என்னவென்றால் அவருடைய பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, அவருக்கு சாத்தூர் ஆகும். ஒப்பந்தத்தை எடுத்த நபர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. ஒப்பந்தத்தை எடுத்த நபரும் வேலை நடக்கும் போது சம்பவ இடத்தில் இருக்க வேண்டும் என்றால் சரிதான், நாங்கள் இருந்ததால் அவர் இருக்கவில்லை.

8. எந்த மேல் அதிகாரியின் உத்தரவுப்படி நாங்கள் மின்கம்பம் நடும் பணிக்கு சென்றோம் என்றால் உதவி பொறியாளரின் உத்தரவுப்படி சென்றோம். மின்கம்பம் நடும் பணியில் நாங்கள் எத்தனை நபர்கள் இருந்தோம் என்றால் 12 நபர்கள் இருந்தோம். வழக்கு சம்பவ சாலை மேற்கிலிருந்து கிழக்கு செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். நாங்கள் மின்கம்பத்தை இறக்கியதாக கூறும் டிராக்டரில் எத்தனை மின்கம்பங்கள் வைத்திருந்தோம் என்றால் 2 மின்கம்பங்கள் வைத்திருந்தோம். மின் கம்பங்கள் இருந்த அந்த டிராக்டரை நாங்கள் மேற்படி சாலையில் வடக்கு – தெற்கு என சாலைக்கு குறுக்கே நிறுத்தி இருந்தோம் என்றால் சரிதான். ஆகையால் அந்த டிராக்டர் மற்றும் மின் கம்பம் சாலை முழுவதையும் அடைத்து, அந்த சாலை வழியாக யாரும் செல்ல முடியாத அளவிற்கு தடை ஏற்படுத்தி இருந்தது என்றால் சரிதான், ஆனால் நாங்கள் டிராக்டரின் இரு பக்கத்திலும் ஆட்களை நிறுத்தி இருந்தோம். டிராக்டர் இருந்த இடத்திற்கும் நாங்கள் ஆட்களை நிறுத்தி இருந்த இடத்திற்கும் சுமார் 20 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் சுமார் 10 மீட்டர் தொலைவு இருக்கும்.

9. மின் கம்பம் இறக்கும் பணிக்காக அந்த வழியாக எத்தனை வாகனங்களை நாங்கள் நிறுத்தி வைத்திருந்தோம் என்றால் இரு சக்கர வாகனங்கள் நிறைய இருந்தது, ஆனால் நாங்கள் என்னென்ன வாகனங்கள் இருந்தது என்று எண்ணிப் பார்க்கவில்லை. டிராக்டருக்கு மேலே எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு நபர்களும், டிராக்டருக்கு கீழே மின் கம்பத்தை இறக்குவதற்கு நான்கு நபர்களும் இருந்தார்கள். மின் கம்பத்தை இறக்கும் போது தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் மின்கம்பத்தில் கயிற்றை கட்டி இறக்கும் சமயத்தில் மேற்படி வாகனம் வந்து விபத்தை ஏற்படுத்தியது.

10. எதிரி ஓட்டி வந்த வாகனம் சாலையின் இடது பக்கத்தில் வந்தது என்றால் நாங்கள் வாகனங்களை ஒரு ஓரமாக நிறுத்தி வைத்திருந்ததால் சாலைக்கு வடக்கு பக்கம் பாதை இருக்கின்றது என்று அவர் அந்த வழியாக வேகமாக வந்து, விபத்து ஏற்பட்ட பிறகு சாலைக்கு வடக்கு பக்கம் உள்ள பள்ளத்தில் அந்த வேன் கவிழ்ந்து விட்டது. மேற்கிலிருந்து கிழக்கு வரும்போது அது சாலைக்கு இடது பக்கம் என்றால் சரிதான். அந்த வாகனம் சாலைக்கு இடது பக்கத்தில் இருந்த ஓடைக்குள் கவிழ்ந்து விட்டது என்றால் சரிதான். நாங்கள் டிராக்டருக்கு 10 மீட்டர் தொலைவில் ஆட்களை நிறுத்தி வைத்து, அந்த வழியாக வந்த வாகனங்களையும் நிறுத்தி வைத்திருந்த நிலையில் அவற்றையும் மீறி வாகனம் வந்து மோத வாய்ப்பில்லை என்றால் அந்த வாகனம் பாதை இருக்கின்றது என்று நினைத்து வந்து கொண்டே இருந்தபோது நாங்கள் வண்டி வருகிறது வண்டி வருகிறது என்று கூறிவிட்டு விலகிவிட்டோம், இறந்து நீ போன நபர் டிராக்டரில் நீளமாக நீண்டு கொண்டிருந்த மின்கம்பத்தில் குனிந்து செல்வதற்குள் அந்த வாகனம் வேகமாக வந்து இறந்து போன நபர் மீது மோதி விட்டது, இறந்து போன நபரின் தலை மேற்படி வாகனம் மற்றும் மின்கம்பத்திற்கு இடையே மாட்டிக்கொண்டது. அந்த வாகனம் மின்கம்பத்தில் மோதி சாலையின் ஓரத்தில் கவிழ்ந்து விட்டது. மின் கம்பத்தில் மேற்படி வாகனம் மோதியதாக கூறும் நிலையில் அந்த வாகனத்திற்கு சேதம் இருந்ததா என்றால் ஒரு பக்கம் மட்டும் சேதம் இருந்தது.

11. இந்த விபத்தில் சாலையின் நின்று கொண்டு இருந்த இருசக்கர வாகனம் மற்றும் வேறு யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மின்கம்பம் இருந்த டிராக்டரை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் முருகன் என்பவர் ஓட்டி வந்தார். ஆனால் நான் கொடுத்த புகாரில் ஆறுமுகம் என்பவர் டிராக்டரை ஓட்டியதாக கூறியுள்ளேன் என்றால் ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டதால் யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. உதவி மின் பொறியாளரிடம் கேட்டு தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் புகாரியில் டிராக்டரை ஆறுமுகம் என்பவர் ஓட்டி வந்ததாகவும், சாட்சியத்தில் முருகன் என்பவர் ஓட்டி வந்ததாகவும் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

12. எதிரி அவருடைய வாகனத்தை கவனமாகத்தான் ஓட்டி வந்தார் என்றாலும், அவருடைய வாகனத்தில் பிரேக் பிடிக்கவில்லை என்பதால் விபத்தை தவிர்ப்பதற்காக 15 மீட்டருக்கு ஓடைக்குள் திருப்பி விட்டார் என்றாலும், அதனால் தான் அவருடைய வாகனம் கவிழ்ந்தது என்றாலும் சரியல்ல, பிரேக் பிடிக்காத வாகனம் என்றால் அவர் அவ்வளவு வேகமாக வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் அப்பொழுதுதான் அவருடைய வாகனத்தின் பிரேக்கை சரி செய்து விட்டு வந்தார் என்றாலும், நாங்கள் டிராக்டரை சாலையின் குறுக்கே நிறுத்தியிருந்ததால் டிராக்டரில் மோதி விபத்து ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக திருப்பியபோது அது பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது என்றால் சரியல்ல, ஒருவேளை அவர் விபத்தை தவிர்க்க வேண்டும் என்று நினைத்து இருந்தால் டிராக்டர் இருந்த இடத்திற்கு 10 மீட்டருக்கு முன்பே சாலையின் ஓரத்தில் வாகனத்தை இறக்கி இருக்கலாம், அல்லது நேராக வந்து டிராக்டர் மீது மோதியிருக்கலாம், ஆனால் அவ்வாறு செய்யாததால்தான் விபத்து ஏற்பட்டது.

13. எங்களுடைய டிராக்டர் மீது வாகனம் மோதவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த சந்துரு மீதும் வாகனம் மோதவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மோதிய சத்தம் கேட்டு தான் பார்த்தோம் என்றால் சரியல்ல, நாங்கள் அங்கு நின்று பார்த்துக் கொண்டே தான் இருந்தோம். வாகனம் ஓடைக்குள் கவிழ்ந்த சத்தம் கேட்டு டிராக்டரில் மின்கம்பத்தை தூக்கி கொண்டிருந்த நபர்கள் கவனக்குறைவாக மின்கம்பத்தை விட்டதில் டிராக்டருக்கு கீழே இருந்த சந்துருவின் தலையில் மின் கம்பம் விழுந்து, அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் அப்பொழுது மின் கம்பத்தை இறக்கவே ஆரம்பிக்கவில்லை.

14. நாங்கள் வாகனத்தை ஓரமாக நிறுத்திதான் பணி செய்ய வேண்டும் என்றாலும், சாலைக்கு குறுக்கே நிறுத்தக்கூடாது என்றாலும் சரியல்ல. எதிரி அவருடைய வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்திற்கும் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்களுடைய தொழிலாளர்களின் கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தை எதிரி ஏற்படுத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவு மற்றும் எங்களுடைய பணியாளர்களின் கவனக்குறைவு ஆகியவற்றை மறைப்பதற்காக, உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் நிர்வாகம் இழப்பீடு கொடுக்கக் கூடாது என்பதற்காகவும், எதிரியின் வாகனத்திடமிருந்து இழப்பீடு வாங்க வேண்டும் என்பதற்காகவும் தான் இந்த வழக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்து போன உயிருக்கு நியாயம் வேண்டும் என்பதற்காகத்தான் புகார் கொடுத்தோம்.

15. வாகனம் மின்கம்பத்தில் மீது மோதி இருந்தால் மின்கம்பத்தின் மீதும் சேதம் இருக்கும் என்றால் மின்கம்பத்தில் மீதும் சேதம் இருந்தது. மின் கம்பத்தில் சேதம் இருந்ததாக என்னுடைய புகார் மற்றும் நீதிமன்றத்தில் கூறிய முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் அந்த பதட்டத்தில் கூறமுடியவில்லை. மின் கம்பம் செய்தமடைந்தது தொடர்பாக மின்வாரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து இருப்போம் என்றால் அவர்களுக்கு தகவல் கொடுத்து, அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு, அந்த மின்கம்பம் பயன்படாது என்று கூறி ஓரமாக போட கூறிவிட்டார்கள். அந்த மின் கம்பம் சேதம் அடைந்த விபரத்தையும், அதற்காக எங்கள் அதிகாரிகளுக்கு கொடுத்த அறிக்கையையும் போலீசார் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் டிராக்டருக்கு சேதம் ஏற்பட்டதா என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sep 29, 2025 5:44 PM

Judicial Magistrate 2, Sattur